**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**அசல் வழக்கு எண்.105/2023**

**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு. எஸ்.முத்துராமன்,பி.எல்.,சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**PW- 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கவிதா | க/பெ.: | மணவாளன் |
| கிராமம்: | கூப்பாச்சிக்கோட்டை | தாலுக்கா: | மன்னார்குடி |
| மதம்: | | தொழில்: | |
| வயது: | 43 | முகவரி: | மேலத்தெரு, |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of **20.02.2026.**

**முதல் விசாரணை :-**

நான் வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்று ஆவணங்களாக கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 15.08.2019 | வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடனுறுதி சீட்டு | அசல் |
| வா.சா.ஆ.2 | 26.12.2022 | வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு அஞ்சல் ரசீதுடன் | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 28.12.2022 | மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை | அசல் |
| வா.சா.ஆ.4 | | வாதியின் ஆதார் அட்டை (அசலோடு ஒப்பு நோக்கப்பட்டது). | நகல் |

எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u> - வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.**

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி
மன்னார்குடி.